3rd March 1969]

(3) அவர்கள் எந்தப் பணியில் வேலைக்கமர்த்தப்படினும் அவர்களின் சம்பள விகிதம் பாதிக்கப்படாமல் பாதுகாப்பளிப் படதற்கும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

THIRU G. KRISHNAMOORTHY : Will the Government give me the number of unqualified or partly qualified part-time and full-time teachers who have been sent out ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : புதிய திட்டத்தால் பாதிக்கப் படுகிற மொழி பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் எண்ணிக்கை 263; அவர்களுக்குப் பின்னால் அரசாங்கம் உத்தியோகம் கொடுக்க வேண்டுமென்ற உத்தேசத்தில் இருக்கிறது. 175 பேர் திரும்ப வேலையில் வைக்கப்பட்டுள்ளனர். 1,729 பேருக்கு மாற்று வேலை கொடுக்கப்பட்டது. 16 பேர் போதிய படிப்பு (unqualified) இல்லாதவர்களாக இருந்தாலும், மாற்றுவேலை தரப்பட்டது. மீதமுள்ளவர் (unqualified) 653 பேர்கள்.

THIRU G. KRISHNAMOORTHY : In view of the large provision made in the Budget, Sir, for new teachers, will the Government consider the proposal just to give relief to these teachers also subject to the condition of getting in-service training, etc., for Secondary Grade teachers?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : ஏற்கனவே இருப்பவர்களுக்கு சர்வீஸ்-இன்-டிரெயினிங் கொடுத்து அந்த வேலை உறுதிப்படு வதற்கு மாற்று முறை வகுக்கப்பட்டது. வேண்டிய படிப்பு இல்லாதவர்கள், பார்ட்-டைம் ஆக இருந்தவர்கள் போன்றவர் களுக்கு, எந்தெந்த முறையில் வேலை வாய்ப்புக் கொடுக்க முடியுமோ அதைக் கொடுக்க முயற்சிக்கப்படுகிறது.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : பணியிருப்புப் பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்டு, இறுதியில் தேர்வு எழுத அனுமதிக்கப்படாமல் இருந்தவர்கள் எத்தனை பேர்? பயிற்சி இல்லாமல் வேறு பணி பார்த்துக் கொடுக்கப்படாமலும் இன்னும் சம்பளம் வாங்காமலும் இருக்கிறவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : 1,750 பேர் வேலையிலிருந்து போகாமல் வைக்கப்பட்டு, அந்த இடைக் காலத்தில் அவர்கள் இந்தப் பயிற்சி பெறலாம் என்றுதான் வைத்திருக்கிறது.

Uniform for teachers

* 103 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether any decision was taken at the meeting of the State Educational Advisory Committee regarding uniform for teachers; and

(b) if so, the details thereof ?

[3rd March 1969

ஆசிரியர்களுக்கு சீருடை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநில கல்வி ஆலோசனைக் குழுவில் ஆசிரியர் சீருடை அணிவது பற்றி தீர்மானிக்கப்பட்டதா?

(இ) ஆமெனில் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Welcome arch arranged at Tallakulam

*104 Q.—Thiru N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether a welcome arch was arranged at Tallakulam, Madurai at the expense of the Public Works Department to welcome the delegates of the World Tamil Conference at Madurai on 15th January 1968 and 16th January 1968 ?

தல்லாகுளத்தில் அமைக்கப்பட்ட வரவேற்பு வளையம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

உலகத் தமிழ் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு 15, 16-1-1968-ல் மதுரையில் வரவேற்பு கொடுக்க (P.W.D.) பொதுப் பணித் துறையின் செலவில் மதுரை தல்லாகுளத்தில் வரவேற்பு வளையம் போடப்பட்டதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : இல்லை.

Mettur Dam

*105 Q.—Thiru N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the height of silt formed in the Mettur Dam ; and

(b) whether there is any proposal to desilt this dam?

மேட்டூர் அணை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மேட்டூர் அணையில் எத்தனை அடி மண் மேடிட்டிருக்கிறது?

(இ) இதைத் தூர் வாரும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?